TNVR090003572015

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05–ஆம் நாள் வியாழக் கிழமை
இ.ம.எண். 4/2024
இன்
முதலேற்பு வழக்கு எண்.73/2015

முனியம்மாள் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

வரதராஜன் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 02.09.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. ராகுலன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனு பட்டியலில் கண்ட பிரதிவாதி தரப்பு சாட்சிகளான விருதுநகர் மாவட்டம், சூலக்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளர், ஜெயராம், பி.ஏ., பி.எல்., அட்வகேட்/நோட்டரி பப்ளிக் மற்றும்

செந்தில்குமார் ஆகிய சாட்சிகளை முதலில் விசாரித்த பிறகு பிரதிவாதியை பின்னிட்டு சாட்சியாக விசாரிப்பதற்கு அனுமதியளித்து உத்தரவிடக்கோரி கட்டளை 18 விதி 3A மற்றும் பிரிவு 151 சி.பி.சி.ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம் :-</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. மேற்படி அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியிடம், மனுதாரர்/பிரதிவாதி ரூ.4,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அதற்கு புரோ நோட் எழுதிக் கொடுத்ததாக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியங்கள் கடந்த 11.12.2017-ஆம் தேதி முடிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டது.

இந்நிலையில் மேற்படி எதிர்மனுதாரரிடம் எந்த கடன் தொகையும் மனுதாரர் வாங்கவில்லை. மனுதாரரின் கணவர் சுப்புராஜ் மேற்படி வாதியிடம் ரூ.40,000/- கடன் பெற்றிருந்தார். மனுதாரரது கணவர் கடந்த 02.03.2013-ஆம் தேதியன்று இறந்து விட்டார். மேற்படி வாதியானவர் மனுதாரர் வீட்டில் தனியாக இருந்தபோது, மனுதாரரது வீட்டிற்குள் நுழைந்து மனுதாரரின் கணவர் அவரிடம் வாங்கிய ரூ.40,000/- கடனுக்கு வட்டி சேர்த்து தொகை தர வேண்டுமென்று மனுதாரரை ஏமாற்றி, மிரட்டி மோசடியாக புரோ நோட்டு ஒன்றில் கையொப்பம் பெற்றுச் சென்று விட்டார். அதன்பிறகு 12.03.2015-ஆம் தேதியன்று வாதி பொய்யான சங்கதிகள் கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதனை பெற்றுக்கொண்ட மனுதாரர் அவரது மகன் செந்தில் குமாரிடம் மேற்படி விஷயங்களை தெரிவித்தபோது, அவரது மகனின் அறிவுறுத்தலின் பேரில் மேற்படி விஷயங்கள் சம்மந்தமாக மனுதாரர்,

எதிர்மனுதாரரை போனில் தொடர்பு கொண்டு பேசியபோது, மனுதாரரிடம் ரூ.40,000/– செலுத்துவதற்கு புரோ நோட்டில் கையொப்பம் பெற்றுவிட்டு, தற்போது 4,00,000/– கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளீர்கள் என்று கேட்டதற்கு வாதியானவர் கந்து வட்டி போட்டு புரோ நோட் நிரப்பியுள்ளேன் என்று கூறினார். அந்த உரையாடல்களை செல்போனில் மனுதாரர் பதிவு செய்து, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிர்மனுதாரரும், மனுதாரரும் பேசிய உடையாடல் தெலுங்கு மொழியில் உள்ளதால் அதனை மனுதாரர் நோட்டரி பப்ளிக் அட்வகேட் மூலம் மொழி மாற்றம் செய்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

மேலும், மேற்படி எதிர்மனுதாரர், மனுதாரரை ஏமாற்றி மோசடியாக பெற்றுக்கொண்ட புரோ நோட்டு சம்மந்தமாக மனுதாரர் 18.03.2015–ஆம் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி சூலக்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி விஷயங்களை மனுதாரர் அவரது தரப்பில் நிரூபிக்க மேற்படி மனுதாரரும், வாதியும் செல்போனில் பேசிய உடையாடல் தெலுங்கில் பதிவாகியுள்ளதால், அதனை நீதிமன்றத்தில் நிரூபிக்கும் பொருட்டு தமிழில் மொழி மாற்றம் செய்து வைத்துள்ளார். மேற்படி மொழி மாற்றம் செய்த நோட்டரி பப்ளிக் அட்வகேட் ஜெயராம் என்பவரையும் மற்றும் மேற்படி 18.03.2015–ஆம் தேதி மனுதாரர், வாதி மீது கொடுத்த புகார் சம்மந்தமாக சூலக்கரை காவல் நிலையத்தில் நடைபெற்ற விசாரணையில் வாதி எழுத்து மூலமாக எழுதி கொடுத்த வாக்குமூலம் பற்றி உரிய ஆவணங்களுடன் சாட்சியம் அளித்திட சூலக்கரை காவல் நிலையம் காவல் ஆய்வாளரையும், மேற்படி விவரங்கள் அனைத்தும் தெரிந்த மனுதாரரின் மகன் செந்தில் குமாரையும் சாட்சிகளாக விசாரித்து, அவர்கள் மூலம் ஆவணங்களை குறியீடு செய்து பிரதிவாதி தரப்பு சாட்சியங்களை முன்னிறுத்திய பிறகு பிரதிவாதியாகிய மனுதாரரை ஒரு சாட்சியாக விசாரிக்கும் பட்சத்தில், சாட்சியம்

கோர்வையாகவும், தெளிவாகவும் அமையும். அதனால் மேற்கண்ட சாட்சிகளை மனுதாரர் தரப்பில் விசாரணை செய்து விட்டு அதன் பின் மனுதாரரை விசாரணை செய்வதற்கு அனுமதி வேண்டி இந்த அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவினை அனுமதிப்பதால் யாருக்கும் எந்தவித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. மாறாக, மேற்படி மனுவினை அனுமதிக்கப்படாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, மனுவுடன் இணைத்துள்ள பட்டியலில் கண்டுள்ள பிரதிவாதி தரப்பு சாட்சிகளை முதலில் விசாரித்த பிறகு பிரதிவாதியை பின்னிட்டு சாட்சியாக விசாரிப்பதற்கு அனுமதியளித்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :-</u>**

இம்மனுவானது சட்டப்படியும், சங்கதிப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் வெளிப்படையாக எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளைத்தவிர மற்ற சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை. அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். வாதி, பிரதிவாதியிடமிருந்து ரூ.4,00,000/- வரப்பெறுவதற்காக புரோ நோட்டின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருப்பதாக கூறியுள்ளது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும், மேற்படி வாதி தரப்பு சாட்சியமானது 11.12.2017-ஆம் தேதி முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

உண்மையில் 18.07.2016-ஆம் தேதி வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டு வழக்கு விசாரணைக்காகவும், சாட்சிகள் மற்றும் ஆவண பட்டியல் தாக்கல் செய்யவும், 19.08.2016-ஆம் தேதி வாய்தா போடப்பட்டது. மேற்படி தொலைபேசி உரையாடல்கள் மற்றும் போலீஸ் புகாரானது

இவ்வழக்கிற்கு முந்தைய நிகழ்வுகள் என்பதாலும், எதிர் வழக்குரையில் அது பற்றி குறிப்பிடப்பட்டதாலும், வழக்கெழு வினா வனைந்த உடனே மேற்படி சாட்சிகள் பட்டியல் தாக்கல் செய்து இருக்கலாம். அசல் வழக்கானது 18.12.2017–ஆம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சிகள் விசாரணை ஒத்தி வைக்க கோரப்பட்டது. அதன் பின்னர் 02.01.2018–ஆம் தேதி வா.சா.1 திரும்ப அழைக்கவும், வாதி தரப்பு சாட்சிகளை மறு திறப்பு செய்யும் மனு தாக்கல் செய்யப்பட்டு 24.01.2018–ஆம் தேதி அனுமதிக்கப்பட்டும், 17.06.2019–ஆம் தேதி வரை வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை. மேலும், 17.06.2019–ஆம் தேதி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151–ன் கீழ் வா.சா.1–ன் குறுக்கு விசாரணையின்போது, CD–ஐ சாட்சியமாக குறியீடு செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு 26.06.2019–ஆம் தேதி வந்ததில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆனால், மேற்படி பிரதிவாதி 03.10.2023–ஆம் தேதி வரை வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்கும் எண்ணத்தில் விசாணைக்காக ஒத்தி வைப்புகளை கோரியுள்ளார். மேற்படி CD–யை ஏற்றுக்கொள்ளக் கோரி மனு தாக்கல் செய்த பின்னரும் CD–யில் உள்ள பதிவுகளை மொழி மாற்றம் செய்வதற்கான சான்றிதழை தாக்கல் செய்யக்கோரி மொழி மாற்றம் செய்வதற்கான சான்றிதழை தாக்கல் செய்துள்ளார். உண்மையில் CD மற்றும் மொழி மாற்ற சான்றிதழ் காலங்கள் வெவ்வேறானது. அதன்பின்னர் மேற்படி 10.11.2023 அன்று அனுமதிக்கப்பட்டது. மேலும், மேற்படி வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்கும் எண்ணத்தில் மேற்படி CD–யை தேவையான உபகரணங்களுடன் மேற்படி வாதி, பிரதிவாதிக்கிடையில் நடந்த உரையாடல் அடங்கிய CD–யை தேவையான உபகரணங்களுடன் ஒளிபரப்ப அனுமதிக்கும்படி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அது 03.08.2024 அன்று அனுமதிக்கப்பட்டது. மேலும், மேற்படி வழக்கானது வா.சா.1–ன் குறுக்கு விசாரணைக்காக 06.08.2024 அன்று வாய்தா போடப்பட்டது. மேலும்,

மேற்படி வா.சா.1, 06.08.2024, 10.08.2024 ஆகிய தேதிகளில் ஆஜராகியிருந்த போதிலும் ஒத்தி வைக்கக்கோரினார். அதன் பின்னர் வாதி திரும்ப அழைக்கப்பட்டு 21.08.2024 அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, 28.08.2024 அன்று பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டது. இதிலிருந்து மேற்படி மனுதாரர்/பிரதிவாதி வழக்கை இழுத்தடிக்கும் கெட்ட எண்ணத்தில் மனுக்கள் மீது மனுக்கள் தாக்கல் செய்தும், ஒத்தி வைக்க கோரியும் உள்ளார்.

தற்பொழுது மேற்படி மனுதாரர்/பிரதிவாதி கட்டளை 18 விதி 3A சி.பி.சி.ன் கீழ் மேற்படி பிரதிவாதியை விசாரிக்கும் முன்பு மேற்படி மனுவில் கண்ட சாட்சிகளை முதலில் விசாரணை செய்ய அனுமதிக்கக்கோரியும், அவரது சாட்சியத்தை பின்னாளில் விசாரணை செய்யவும் கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், மற்ற சாட்சிகள் விசாரணை செய்த பின்னர் அதிலுள்ள இடைவெளி மற்றும் ஓட்டைகளை நிரப்பும் வகையில் வழக்காடிக்கு நேரம் கிடைக்க செய்வதை அனுமதிக்கக்கூடாது. கட்டளை 18 விதி 3A சி.பி.சி.ன் கீழான பரிகாரமானது தரப்பினர்கள் பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு அவர்களால் சாட்சி கூண்டில் ஏற முடியாத சூழ்நிலையில் உள்ளார் என்பதை நம்பும் அளவுக்கு போதிய காரணங்கள் இருக்க வேண்டும். ஆனால், இந்த மனுதாரர்/பிரதிவாதி எவ்வித நோய் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

மேலும், காவல் நிலையத்தில் உரிமையியல் பிரச்சனைகளில் தலையிட காவல் துறையினருக்கு அதிகாரம் இல்லாததால் அவர்களை தரப்பினர்களாக விசாரிப்பது தேவையில்லாதது. மேலும், 12.03.2015–ஆம் தேதி எதிர்மனுதாரர்/வாதி நோட்டீஸ் அனுப்பிய பின்னார் சட்ட ஆலோசனை பெற்று 18.03.2015–ஆம் தேதி மேற்படி புகார் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, காவல் துறையினர் அதில் தலையிட உரிமை இல்லாத நிலையில் அதன் மீதான

விசாரணையானது இவ்வழக்கிற்கு தொடர்பற்றது மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. மேலும், மேற்படி புகாரின் சான்றிட்ட நகலினை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறலாம். அவ்வாறு சம்மந்தப்பட்ட துறையினர் அதை தாக்கல் செய்ய தவறினால் அது தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்பலாம். மேற்படி மனுதாரருக்கு இவ்வழக்கில் எவ்வித தகுதியும் இல்லை என்று தெரிந்தும இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மேலும், திரு. ஜெயராம் வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக் என்பவர் மேற்படி தொலைபேசி உரையாடலை மொழி மாற்றம் மட்டுமே செய்துள்ளார். எனவே, அவரது சாட்சியமானது மேற்படி தொலைபேசி உரையாடலில் உள்ள உரையாடலானது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் உடையது என்பது அவரால் கூற இயலாது. எனவே, அதை நிரூபிக்க அவர் சரியான நபர் அல்ல. மேலும், மேற்படி மனுதாரரின் மகன் செந்தில்குமார் என்பவரை பிரதிவாதிக்கு முன்பே விசாரணை செய்யக் கோருவது நிலைக்கத்தக்கதல்ல. ஏனெனில் மேற்படி மனுதாரர் இம்மனுவில் மேற்படி சாட்சியத்தை உறுதிபடுத்தும் அளவுக்கு இயலாத வகையில் ஏதேனும் வியாதிகள் இருப்பதாக சொல்லவில்லை. மேலும், மேற்படி மனுவில் வேண்டுமென்றே வழக்கில் உள்ள இடைவெளி மற்றும் ஓட்டைகளை சரி செய்யும் எண்ணத்திலேயே சாட்சி கூண்டில் ஏறுவதை தவிர்த்து வருகிறார். எனவே, மேற்படி மனுதாரருக்கு அவர் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இரு தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு

கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**7.** மேற்படி அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதி 05.11.2012–ஆம் தேதி புரோ நோட்டின் பேரில் பெற்ற ரூ.4,00,000/– கடன் தொகையை ரூ.100/–க்கு ரூ.1/– வட்டியுடன் திரும்ப செலுத்தக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியின் கணவர் 02.03.2013–ஆம் தேதி இறந்து விட்டதாகவும், அவர் உயிரோடு இருந்தபோது, கிருஷ்ணராமானுஜம் என்பவர் மூலம் வாதிக்கு அறிமுகமாகி குடும்ப நண்பர்களாக பழகி வந்ததாகவும், அப்போது பிரதிவாதியின் கணவர் வாதிக்கு ரூ.40,000/– வரை தர வேண்டியிருந்ததாகவும், அப்போது பிரதிவாதியின் கணவரிடம் வாதி பூர்த்தி செய்யப்படாத புரோ நோட்டில் வாதியிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி சுப்புராஜ் 02.03.2013–ஆம் தேதி இறந்து விட்ட பின்னர் மேற்படி வாதி, பிரதிவாதியிடம் எந்த பிரஸ்தாபமும் செய்யவில்லை என்றும், கடந்த 2015–ஆம் ஆண்டு வாதி, பிரதிவாதியிடம் தனது கணவர் சுப்புராஜ் ரூ.40,000/– வரை கடன் பெற்று பல வருடங்கள் ஆவதாகவும், அதற்கு வட்டி சேர்த்து தொகை தர வேண்டுமென்றும், பூர்த்தி செய்யாத புரோ நோட்டில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், இந்நிலையில் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னர் மறுநாள் பிரதிவாதியின் தொலைபேசி எண்ணிற்கு வாதியின் தொலைபேசியிலிருந்து தொடர்பு கொண்டு வாதியிடம் ரூ.40,000/– செலுத்த வேண்டியிருப்பதாக கையொப்பம் பெறுவதாக சொல்லிவிட்டு ரூ.4,00,000/– கேட்டு ஏன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தீர்கள் என்று கேட்டதற்கு வாதி கந்து வட்டி போட்டு ரூ.4,00,000/– கேட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளதாகவும், இது சம்மந்தமாக 18.032015–ஆம் தேதி வாதி மீது காவல் துறையில் புகார் அளித்ததாகவும் பிரதிவாதி வாதம் செய்துள்ளார். எனவே, மேற்படி பிரதிவாதிக்கு அவரது வாதத்தினை நிரூபிக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி புகார் சம்மந்தமாக தன்னை விசாரணை செய்த காவல் ஆய்வாளரையும், மேற்படி வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையிலான உரையாடலை தமிழில் மொழி மாற்றம் செய்த ஜெயராம் என்ற வழக்கறிஞரையும், அதை செல்போனில் பதிவு செய்த பிரதிவாதியின் மகன் செந்தில்குமார் என்பவரையும் தனக்கு முன்பாக மற்ற சாட்சிகளை விசாரித்த பின்னர் தன்னை சாட்சியாக விசாரிக்கும்படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**8.** ஆனால், மேற்படி வாதி தரப்பில் வாதி மனுக்கள் மீது மனுக்கள் தாக்கல் செய்து வழக்கினை இழுத்தடித்து வருவதாகவும், தற்போதைய சூழலில் பிரதிவாதியை விசாரணை செய்ய முடியாத அளவுக்கு ஏதேனும் வியாதியுடன் உள்ளதாக பிரதிவாதி கூறவில்லை என்றும், எனவே, இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

**9.** இவ்வழக்கில் வாதி, பிரதிவாதியிடமிருந்து ரூ.4,00,000/– வட்டியுடன் செலுத்த வேண்டுமென்றும் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி பிரதிவாதி ரூ.40,000/– வரை தான் வாதிக்கு தர வேண்டியுள்ளதாக கூறி அது சம்மந்தமாக காவல் நிலையத்திலும் புகார் அளித்து விசாரணை செய்யப்பட்டதாகவும், மேற்படி உரையாடலை அவரது செல்போனிலும் பதிவு செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ள நிலையில் அதை நிரூபிக்க வேண்டிய சுமையானது பிரதிவாதியிடம் உள்ளது. எனவே, மேற்படி விவரங்கள் சம்பந்தமான ஆவணங்கள் உரிய தரப்பினர் மூலம் குறியீடு செய்து அதன் பின்னர் சாட்சியம் அளிக்க வேண்டியுள்ளது. மேலும், மேற்படி வாதமானது மேற்படி பிரதிவாதியால் ஏற்கனவே எதிர் உரையிலும், அதற்கு பின்னிட்ட பல மனுக்களிலும் சொல்லியுள்ள நிலையிலும் அதில் எவ்வித இடைவெளியையோ, ஓட்டைகளையோ அடைக்க வாய்ப்பு இல்லை. எனவே, மேற்படி சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அவர்கள் மூலமாக ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்ட பின்னர் பிரதிவாதி மேற்படி விவரங்கள் சம்பந்தமாக சாட்சியம் அளிப்பது மேற்படி வழக்கின் பின்னணியில் உள்ள உண்மைகளை தெளிவாக்குவதாகவும், பொருத்தமானதாகவும் இருக்கும். எனவே, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடலாம் என்றே தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,

விருதுநகர்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,

விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.4/2024 இன்
மு.வ.எண்.73/2015
உத்தரவு நாள். 05.12.2024